# முதல் ஆசியான்-இந்தியா ட்ராக் 1 சைபர் கொள்கை உரையாடல்

அக்டோபர் 16, 2024

லாவோ PDR-ன் வியன்டியேனில் கடந்த 10 அக்டோபர் 2024 அன்று நடைபெற்ற 21-வது ஆசியான்-இந்தியா உச்சி மாநாட்டின்போது இந்தியப் பிரதமர் அறிவித்ததுபோன்று, முதலாவது ஆசியான்-இந்தியா ட்ராக் 1 சைபர் கொள்கை உரையாடல் கடந்த அக்டோபர் 16, 2024 அன்று சீங்கப்பூரில் நடைபெற்றது. இந்த உரையாடலுக்கு வெளியுறவு அமைச்சகத்தின் இணையத் தூதரகப் பிரிவின் இணைச் செயலர் திரு. அமித் ஏ. சுக்லா மற்றும் ஆசியான்-இந்தியா உரையாடல் உறவுகளுக்கான இந்தியாவின் நாட்டின் ஒருங்கிணைப்பாளராக பிலிப்பைன்ஸ் இருப்பதால் பிலிப்பைன்ஸின் உள்கட்டமைப்பு மேலாண்மை, சைபர் பாதுகாப்பு மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் துறையின் துணைச் செயலரான திரு. ஜெஃப்ரி இயன் டை ஆகியோர் இணைந்து தலைமை தாங்கினர்.

2. உரையாடலின் போது, இணைய அச்சுறுத்தலின் பரப்பு, தேசிய இணையக் கொள்கைகள், அச்சுறுத்தல் மதிப்பீடு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையில் ICT தளத்தில் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து இரு தரப்பும் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர். குறிப்பிட்ட செயல்பாடுகளின் விஷயங்களை அடையாளம் காண்பதற்கான திறன் மேம்பாடு மற்றும் பயிற்சியில் ஒத்துழைப்பு குறித்து இந்த உரையாடல் அமைந்தது.

3. 10 அக்டோபர் 2024 அன்று ஆசியான்-இந்தியா உச்சிமாநாட்டின் போது வெளியிடப்பட்ட டிஜிட்டல் மாற்றத்தை முன்னேற்றுவதற்கான ஆசியான்-இந்தியா கூட்டு அறிக்கையை செயல்படுத்துவதன் மூலம் ஆசியான்-இந்தியா விரிவான உத்திசார் கூட்டாளித்துவத்தை வலுப்படுத்துவதற்கு இந்த உரையாடல் பங்களித்தது.

**புது டெல்லி**
**அக்டோபர் 16, 2024**